பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 04 2025 7 15

வெள்ளிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்து பயணத்தை முடித்துக் கொண்டு இன்று இலங்கை செல்கிறார்.

2. உலக அளவில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழலில் சுயசார்பு அவசியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

4. வக்ஃப் சட்டத் திருத்தத்தால் கோடிக் கணக்கான ஏழை இஸ்லாமியர்கள் பயன் அடைவார்கள் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

5. **Manchester Open** ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தாய்லாந்தில் நடைபெறும் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டின்போது 2030ஆம் ஆண்டுக்கான பிம்ஸ்டெக் தொலைநோக்கு பார்வை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படும்.

பிம்ஸ்டெக் அமைப்பில் இந்தியா, பங்களாதேஷ், பூடான், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக தாய்லாந்து பிரதமர் திருமதி **Paetongtarn Shinawatra** உடன் இருதரப்பு உறவுகள் குறித்து திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இன்று இலங்கை செல்கிறார்.

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் திரு. அநுரகுமார திசநாயக-வை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

இந்தியாவின் ஆதரவுடன் இலங்கையில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

பிரதமரின் இந்த இலங்கைப் பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

<<<<>>>>

உலக அளவில் தற்போது நிலவி வரும் அரசியல் சூழலில் சுயசார்பு அவசியமானது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

பிம்ஸ்டெக் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், உணவு, எரிசக்தி, தடுப்பூசி உள்ளிட்டவற்றில் உலக நாடுகள் தங்களது தேவையை தாங்களே பூர்த்தி செய்துகொள்வதற்கான வழிகளை கண்டறிய வேண்டும் என்றார்.

பிம்ஸ்டெக் நாடுகள் அதிக ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் பிம்ஸ்டெக் நாடுகளை இணைக்கும் பகுதிகளாக அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த மாநிலங்களின் வாயிலாக பிம்ஸ்டெக் நாடுகளுக்கிடையே போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தின்போது பிம்ஸ்டெக் நாடுகளுக்கு இடையே கடல்சார் போக்குவரத்து ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதில் நேபாள வெளியுறவு அமைச்சர் திரு. **Arzu Rana Deuba** வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் பிம்ஸ்டெக் நாடுகளின் அமைச்சர்கள் கையெழுத்திட்டனர்.

வங்கக் கடல் பகுதி நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரிக்க நேபாளம் உறுதிபூண்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதை உறுதி செய்வதற்கான சட்டப்பூர்வ தீர்மானம் மாநிலங்களவையில் இன்று அதிகலை நிறைவேற்றப்பட்டது.

இதன் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய திரு. அமித் ஷா, கடந்த நவம்பர் மாதத்திற்குப் பிறகு மணிப்பூரில் வன்முறை சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை என்றார்.

பத்தாயிரம் இளைஞர்கள் வன்முறையைக் கைவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மணிப்பூரில் அமைதிக்கான பேச்சுவார்த்தை ஏற்கனவே இரண்டு சுற்றுகளாக நடைபெற்றுள்ளதாகவும், அடுத்தகட்ட பேச்சுவார்த்தை புதுதில்லியில் விரைவில் நடைபெறும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மக்களவையைத் தொடர்ந்து மாநிலங்களவையிலும் இன்று அதிகாலை நிறைவேற்றப்பட்டது.

12 மணி நேர விவாதத்திற்குப் பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில், மசோதாவுக்கு ஆதரவாக 128 வாக்குகளும், எதிராக 95 வாக்குகளும் பதிவாகின.

முன்னதாக விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த சட்டத்திருத்தத்தால் கோடிக்கணக்கான ஏழை இஸ்லாமியர்கள் பயனடைவார்கள் என்று கூறினார்.

இது எந்த வகையிலும் இஸ்லாமியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று அவர் உறுதிபட தெரிவித்தார்.

அனைத்துத் தரப்பினரின் வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதாகவும், எந்த சமூகத்தினருக்கு எதிராகவும் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<>>>>

உள்நாட்டு முதலீட்டாளர்கள் புத்தொழில்களில் அதிக அளவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் 3 நாட்கள் நடைபெறும் புத்தொழில் திருவிழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், ரோபோடிக்ஸ் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் அதிக முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களில் 3வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய அவர், புதுமைக் கண்டுபிடிப்புகளையும், தொழில்முனைவோரையும் ஊக்விக்க அரசு உறுதிபூண்டுள்ளது என்றார்.

இந்த புத்தொழில் திருவிழா இளையோர் மற்றும் மாணவர்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமையும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளத்தில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்ட அகழாய்வில் செம்பினால் செய்யப்பட்ட அஞ்சனக்கோல் கிடைத்துள்ளது.

இது பழங்கால தமிழரின் செழிப்பான வாழ்க்கை முறையை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோரின் பங்களிப்பு அவசியமானது என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இரண்டு நாள் நடைபெற்ற இளையோர் நாடாளுமன்ற நிறைவுநாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், இளையோர் ஜனநாயக நடைமுறைகளை புரிந்துகொண்டு நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒரே தேசம் - ஒரே தேர்தல் தொடர்பாக இந்த இளையோர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

நாட்டின் நீர் ஆதாரங்களை வலுப்படுத்த மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதக நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நீர்வளங்களை கண்காணிப்பது தொடர்பான இணையதளத்தை நேற்று தொடங்கி வைத்த அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜார்கண்டில் பழங்குடியினர் திருவிழாவை மத்திய பஞ்சாயத்ராஜ் துறை இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாகல் இன்று தொடங்கி வைக்கிறார்.

பகவான் பிர்சா முண்டாவின் 150வது பிறந்த ஆண்டை முன்னிட்டு இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 500க்கும் மேற்பட்ட பழங்குடியின பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

<<<<>>>>

**Manchester Open** ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 2-11, 11-7, 11-8 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Nathan Lake**-ஐ வென்றார்.

<<<<>>>>

புருண்டியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Riya Bhatia –** புருண்டியின் **Sada Nahimana** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட் கணக்கில் ஜார்ஜியாவின் **Ekaterine –** செர்பியாவின் **Darja** இணையை வென்றது.

<<<<>>>>

பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah – Karan Singh** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-2 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Alexandr Binda -** ரஷ்யாவின் **Nikita Lanin** இணையை வென்றது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 80 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து அரையிறுதி போட்டியின் முதலாவது சுற்றில் ஜம்ஷெட்புர் அணி – மோகன் பஹன் அணியை வென்றது.

<<<<>>>>

தேசிய சீனியர் ஹாக்கிப் போட்டி உத்தரப்பிரதேசத்தின் ஜான்சியில் இன்று தொடங்குகிறது.

வரும் 15ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் தமிழ்நாடு உட்பட 30 அணிகள் பங்கேற்கின்றன.

**<<<<The End>>>>**